பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

09 03 2026 MONDAY 7 15 PM

ஆகாஷவாணி

(Tune)

தலைப்புச் செய்திகள்

1. நாடாளுமன்ற நடைமுறைகளையும், அரசியல் சட்ட விதிமுறைகளையும் மதிக்காமல் காங்கிரஸ் கட்சி செயல்படுவதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் குற்றம் சாட்டியுள்ளார்.

2. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ள போதிலும் பணவீக்கத்தை தொடர்ந்து கட்டுக்குள் வைத்திருக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. பிரதமரின் இலவச எரிவாயு திட்டத்தின் கீழ் இதுவரை 10 கோடியே 51 லட்சம் ஏழை பெண்களுக்கு இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது

4. ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலைத் தொடர்ந்து லெபனான் நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் இரண்டாண்டுகள் நீட்டிக்கப்பட்டுள்ளது.

5. உலக கோப்பைக்கான தகுதிச்சுற்று மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று ஸ்காட்லாந்தை எதிர்கொள்கிறது.

- - இனி விரிவான செய்திகள் -

>>>><<<<<<

மக்களவையில் ஏற்கனவே திட்டமிடப்பட்ட விவாதங்களை காங்கிரஸ் கட்சி தவிர்க்க முயற்சிப்பதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் குறை கூறியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களவை தலைவருக்கு எதிராக, காங்கிரஸ் கட்சி ஏற்கனவே கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை விவாதத்திற்கு ஏற்றுக்கொண்ட நிலையில் புதிதாக தீர்மானம் கொண்டு வர அக்கட்சி முயற்சிப்பது சரியல்ல என்று கூறினார்.

நாடாளுமன்ற நடைமுறைகளையும், அரசியல் சட்ட விதிமுறைகளையும் மதிக்காமல் காங்கிரஸ் கட்சி செயல்படுவதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் குற்றம் சாட்டியுள்ளார்.

>>>><<<<<<

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ள போதிலும் பணவீக்கத்தை தொடர்ந்து கட்டுக்குள் வைத்திருக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மக்களவையில் எழுத்து மூலம் அவர் அளித்த பதிலில், பண வீக்கத்தின் தாக்கம் சாமானிய மக்களை பாதிக்காத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

உலகளவில் கச்சா எண்ணை விலை உயர்வால் ஏற்பட்டுள்ள தாக்கம் பணவீக்கத்துடன் தொடர்புடைய வட்டி விகித பரிமாற்றம், தேவை மற்றும் வழங்கலுக்கு இடையேயான சூழல், பணக்கொள்கை பரிமாற்றம் போன்ற காரணிகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

கடந்த ஓராண்டாக உலகளவிலான கச்சா எண்ணை விலையும், இந்திய சந்தையில் அதன் விலையும் குறைந்து வந்ததாகவும், கடந்த மாதம் 28-ஆம் தேதி முதல் மேற்காசியாவில் எழுந்துள்ள சூழலுக்கு பிறகே கச்சா எண்ணை விலை உயர்ந்ததாக நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

>>>><<<<<<<

மேற்காசியாவில் எழுந்துள்ள சூழலை மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதாக விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், உள்நாட்டு விமான போக்குவரத்து நிறுவனங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருப்பதாக கூறினார்.

மேற்காசியாவில் எழுந்துள்ள சூழலை கருத்தில் கொண்டு அந்த பிராந்தியத்தில் இயக்கப்படும் விமானங்கள் நூறு சதவீத பாதுகாப்பு உத்தரவாதம் இருந்தால் மட்டுமே இயக்கப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு விமான போக்குவரத்து இயக்குனரகம் அறிவுறுத்தியதாக அமைச்சர் கூறினார்.

விமானங்கள் ரத்து மற்றும் நேர மாற்றம் தொடர்பான குழப்பங்களை தவிர்க்க, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் பயணிகளுக்கு உரிய அறிவுறுத்தல்களை அளிக்குமாறு விமான நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும் திரு. ராம் மோகன் நாயுடு குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<<<<

மேற்காசியாவில் நிலவும் சூழலை கருத்தில் கொண்டு தில்லி விமான நிலையம் சார்பில் பயணிகளுக்கு அறிவுறுத்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி மேற்கு நாடுகளுக்கு செல்லும் சர்வதேச விமானங்கள், வருகை மற்றும் புறப்பாடு தாமதமாகலாம் அல்லது நேரம் மாற்றியமைக்கப்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே விமான நிலையத்திற்கு வரும் பயணிகள் தங்களின் விமான நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக்கொள்ளுமாறும் இணைய தளங்களில் விமானங்களின் தாமதம் குறித்து அறிந்து கொள்ளுமாறும் அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

>>>>><<<<<<

ஜார்கண்ட் மாநிலத்தில் **Giridih** மாவட்டம் **Bengabad** காவல் நிலைய எல்லைக்குள் பீகார் சிறப்பு அதிரடிப்படையினரும், உள்ளூர் காவல்துறையினரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் இரண்டு மாவோயிஸ்டுகள் சரணடைந்தனர்.

பங்கஜ் யாதவ், பவன்சிங் என்ற இருவரும் பல்வேறு வழக்குகளில் தேடப்பட்டு வந்தவர்கள் என்றும் நீண்ட காலமாக தலைமறைவாக இருந்தவர்கள் என்றும் காவல் துறையினர் தெரிவித்தனர்.

>>>>><<<<<<

பிரதமரின் இலவச சமையல் எரிவாயு திட்டத்தின் கீழ் இதுவரை 10 கோடியே51 லட்சம் ஏழை பெண்களுக்கு இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி, கடந்த 2016-ம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் உள்ள பெண்களுக்கு வைப்புத்தொகை இல்லாமல் எரிவாயு இணைப்பு வழங்கப்படுவதாக கூறினார்.

மரம், சாண எரு, பயிர்க்கழிவுகளை எரித்து பாரம்பரிய முறையில் சமையல் செய்வதில் இருந்து பெண்கள் எரிவாயு இணைப்பு மூலம் நவீனத்துவத்துக்கு மாறி உள்ளதாக அவர் தெரிவித்தார்.

எரிவாயுவை பயன்படுத்துவதால் காற்று மாசுபடுதல் குறைவதுடன் பெண்கள், குழந்தைகளின் நுரையீரல் தொடர்பான நோய் பாதிப்புகளும் ஏற்படாமல் தடுக்கப்பட்டு இருப்பதாக திரு. சுரேஷ் கோபி கூறினார்.

>>>>><<<<<<

வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் உறுப்பு நாடுகள் மீதான ஈரானின் தாக்குதலுக்கு சவுதி அரேபியா கண்டனம் தெரிவித்துள்ளது.

தங்கள் நாட்டு மக்களின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மையை பாதுகாப்பதற்கு வளைகுடா நாடுகளுக்கு

அனைத்து உரிமைகளும் உள்ளதாக சவுதி அரேபிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஈரானின் தாக்குதலால் பதற்றம் மேலும் அதிகரிக்கும் என்றும் இரு தரப்பு நல்லுறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அந்த அமைச்கத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

>>>><<<<<<<

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலைத் தொடர்ந்து லெபனான் நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் இரண்டாண்டுகள் நீட்டிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற பதவிக்காலத்தை நீட்டிப்பதற்கான வாக்கெடுப்பில் 71 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்ததாகவும் 41 பேர் எதிர்த்து வாக்களித்ததாகவும், 4 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை என்றும் லெபனான் அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

>>>><<<<<<<

பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு, மின்சாரம் மற்றும் எரிபொருள் சேமிப்பு நடவடிக்கையாக அனைத்து அரசு மற்றும் தனியார் பல்கலைக் கழகங்கள் இன்று முதல் மூடப்பட்டுள்ளன.

அந்நாட்டில் ரமலான் பண்டிகையை முன்னிட்டு முன்கூட்டியே விடுமுறை விடுவதன் மூலம் எரிபொருள் தட்டுப்பாட்டை ஓரளவு சமாளிக்க முடியும் என்று பங்களாதேஷ் கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக முன்கூட்டியே விடுமுறை விடப்பட்டு இருப்பதாகவும், பல்கலைக்கழகங்களில் வகுப்பறைகள் ஆய்வகங்கள் மற்றும் குளிர்சாதான வசதிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் எரிபொருளை சேமிக்க முடியும் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாக அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பங்களாதேஷில் ரமலான் மாதத்தை முன்னிட்டு அரசு மற்றும் தனியார் பள்ளிகள் ஏற்னவே மூடப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

>>>><<<<<<<

இலங்கையின் மின்சார துறையை மறுசீரமைக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, அந்நாட்டின் சிலோன் மின்சார வாரியம் கலைக்கப்பட்டுள்ளது.

அதற்கு பதிலாக 6 புதிய கம்பெனிகள் தொடங்கப்பட்டு இருப்பதாக இலங்கை எரிசக்தி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

மின்சார உற்பத்தி, மின் பகிர்மானம், வழங்கல் மற்றும் தொடர் நடவடிக்கைகளை புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஆறு நிறுவனங்கள் மேற்கொள்ளும் என்று இலங்கை எரிசக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>><<<<<<

ஸ்காட்லாந்தின் பரபரப்பான கிளாஸ்கோ சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தால் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்த ரயில் நிலையம் மூடப்பட்டு இருப்பதாகவும், தீயை அணைக்கும் பணியில் தீயணைப்புத்துறையினர் தொடர்ந்து ஈடுபட்டிருப்பதாகவும் அந்நாட்டு ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள கட்டிடத்தில் பற்றிய தீ பரவியதில், நான்கு மாடிக் கட்டிடம் சேதமடைந்திருப்பதாகவும் ஸ்காட்லாந்து அதிகாரிகள் தெரிவித்தனர்.

>>>><<<<<<

உலக கோப்பைக்கான தகுதிச்சுற்று மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று ஸ்காட்லாந்தை எதிர்கொள்கிறது.

ஹைதாபாதில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

--------------

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச நீச்சல் போட்டியில் இந்தியாவின் Rishabh Das வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 100 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

--------------

உலக டிவென்டி டிவென்டி கிரிக்கெட் கோப்பையை மூன்றாவது முறையாக வென்ற இந்திய அணிக்கு மாநிலங்களவையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

>>>>End<<<<<<<